பக்கங்கள் 8 ★

# ஈழநாடு

50 சதம்

EELANAADU

ஆடி 1 | ரமழான் 3 | இதழ் 157
புதன்கிழமை | 16-7-80

UNIVERSITY OF SRI LANKA LIBRARY
REGISTERED 1980-7-1
PERIODICALS DIVISION
யாழ்ப்பாணம்

வாடிவீடு கட்டப்படவிருந்த காணியை

## ஒலிப்பதிவு நிலையம் கட்ட மாநகரசபை வழங்கும்!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பண்ணையில் புதிய வாடிவீடு கட்டப்பட இருந்த காணியை, யாழ். மாநகரசபை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கத் தீர்மானித்திருக்கிறது. இக்காணியில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அதன் ஒலிப்பதிவு நிலையத்தை அமைக்கும்.

யாழ் மேயர் திரு இராசா விசுவநாதன், மாநகரசபை உறுப்பினர்களுடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் பண்ணையில் வாடிவீடு கட்டப்படவிருந்த காணியை ஒலிப்பதிவு நிலையம் அமைப்பதற்குக் கையளிப்பதென்ற இம்முடிவு

[8-ம் பக்கம் பார்க்க]

# அமரர் 'நித்தி'யின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்!

## மக்கள் ஓவெனக் கதறி அழ சகோதரர் தீமூட்டினர்

(யாழ்ப்பாணம்)

**பழம்பெரும் தொழிற்சங்கத் தலைவரும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவருமான அமரர் கே. சி. நித்தியானந்தாவின் பூதவுடல் நேற்று மாலை 7-30 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் அக்கினியுடன் சங்கமமாகியது.**

**கூடிநின்ற பெருந்தொகையான மக்கள் ஓவெனக் கதறி அழ, அமரரின் சகோதரர் டாக்டர் கே. சி. சச்சிதானந்தா சிதைக்குத் தீமூட்டினார்.**

அமரரின் பூதவுடலைத் தாங்கிய சடலம் நேற்றுக்காலை 9 மணியளவில் அமரரின் கன்னாதிட்டியிலுள்ள இல்லத்திலிருந்து யாழ் மாநகரை நோக்கிப் புறப்பட்டது.

அகதிகள் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள், மொழிவழித் தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள், பணம்போகுமடி அபிவிருத்திச் சபையின? வங்கி தேச வங்கியைச் சேர்ந்த ஊழியர்கள், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோரும் பூதவுடலைத் தாங்கிய ரதத்தோடு ஊர்வலமாகச் சென்றனர். அனுவும் அமரரின் உதவி பெற்றவர்கள் கூடப் பெருந்திரளாகக் கலந்து கொள்ளவில்லையென்று இளைசகோலிப்பட்டனர். வீதியின் இருமருங்கிலும் தோரணங்கள் கட்டப்பட்டும், கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டுமிருந்தன. வீதியோரங்களிலும் வீட்டு வாசல்களிலும் மக்கள் கூடி நின்று அஞ்சலி செலுத்தினர்.

நண்பகல் 12-30 மணியளவில் அமரரின் பூதவுடல் யாழ். மாநகரசபை மண்டபத்தை வந்தடைந்தது. சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், மாநகரமுதல்வர் திரு. இராசா விசுவநாதன், ஆணையாளர் திரு. சி. சிவஞானம் ஆகியோர் அமரரின் பூதவுடலைத் தாங்கிய பேழையைத் தூக்கிச்சென்று யாழ். மாநகர மண்டபத்தில் வைத்தனர்.

### அரச அதிபர் அஞ்சலி

நேற்று நண்பகல் யாழ்மாவட்ட செயலகத்தின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமியும், யாழ். செயலக உயர் அதிகாரிகள் ஆகியோரும் மாநகர மண்டபத்திற்குச் சென்று இறுதியஞ்சலியைச் செலுத்தினர். கூட்டணி எம். பி.க்களும், தொழிற்சங்கவாதிகளும், வடபகுதி இடதுசாரித் தலைவர்களும், மாணவர்களும், பொதுமக்களும் அணிஅணியாகச் சென்று அமரருக்குத் தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

### அகதிகள் அஞ்சலி

77ம் ஆண்டு இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு மலையகத்திலிருந்து குடிபெயர்ந்து வவுனியாவில் வந்து குடியேறியுள்ள அகதிகளில் பெருந்தொகையான ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் கூட அமரரின் பூத உடலுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

மாலை 5 மணியளவில் இரங்கல் உரை நிகழ்த்தப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் மற்றும் மொழிவழித்தொழிற் சங்கங்களின் உறுப்பினர்கள் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரும் உரையாற்றினர்.

மாலை 5-30 மணியளவில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் விசேடமாக அமைக்கப்பட்ட சிதையை நோக்கி அமரரின் பூதவுடலைத் தாங்கிய பேழையைத் தூக்கிச் சென்றனர்.

மாநகர மண்டபத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தின் முன் வரிசையில் மலர்வளையங்களைத் தாங்கிய வண்ணம் பெண்கள் அணிவகுத்துச் சென்றனர். இவர்களைத் தொடர்ந்து அரசியல் ... சென்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னதிட்டி றேட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலிவீதி, கொழும்பு 3
தொலைபேசி: 89190

சம்பளப் பணம் கொள்ளை:

## சந்தேகநபர் மூவர் பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் சம்பளப்பணம் 48,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களில் மூவர் தலா 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாயில் முன்னிலையில் இப்பிணை மனு விசாரணை செய்யப்பட்டது. சட்டத்தரணி ஆர். தவராசா இப்பிணை மனுவை தாக்கல் செய்தார். அரச தரப்பில் சட்டத்தரணி வி. அரவிந்தன் ஆஜரானார்.

சந்தேகநபர்களான சின்னத்துரை கோபாலன், நல்லையா சந்குணராசா, வேலுப்பிள்ளை ஜெகதாஸ் ஆகியோரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு மனுவில் கோரப்பட்டிருந்தது.

நீதிபதி மூவரையும் தலா 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து, ஒவ்வொருமாதமும் 20ம் தேதி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு செல்ல வேண்டுமென்றும் உத்தரவிட்டார். (-)

## "தமிழ் மக்கள் விரும்பினால் பிரிந்துசெல்ல உரிமையுண்டு"

### வர்த்தக ஊழியர்சங்க பிரதிநிதி பேச்சு

(யாழ்ப்பாணம்)
"தமிழ் மக்கள் விரும்பினால் பிரிந்து செல்லும் உரிமை அவர்களுக்கு உண்டு. அதைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை."

79ம் ஆண்டு ஜூலை மாதம் அரசாங்கத்தால் யாழ். மாவட்டத்தில் பிரகனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் போது பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களின் முதலாவது ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் பேசிய வர்த்தக ஊழியர் சங்கப் பிரதிநிதி திரு ஜி. எச். பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

இளைஞர்களிடையில் நிதிக்கும் சமாதானத்திற்குமான இயக்கத்தினால் நடாத்தப்பட்ட இக் கூட்டம் யாழ். நிமர் மண்டபத்தில் திரு. சிலன் கதிர்காமர் தலைமையில் நடைபெற்றது. அவசரகாலச் சட்டத்தின்போது பாதிக்கப்பட்ட எஸ் செல்வரத்தினம் (செல்வம்) எஸ் இராஜேஸ்வரன் (குதா) எஸ். பரமேஸ்வரன் (ராஜன்) ஆகிய மூவரின் மனைவிகள் தங்களின் கைக்குழந்தைகளுடனும் கே. இன்பம், பாலேந்திரா, சுபாஸ் சந்திரராஜா ஆகியோரின் பெற்றோரும் சகோதர சகோதரிகளும் கூட்டத்திற்கு வந்து முன்வரிசையில் சோகமே உருவாக இருந்தனர்.

திரு. பெர்னாண்டோ தொடர்ந்து கூறியதாவது: "1947ம் ஆண்டு முதல் இன்று வரையில் ஆட்சி நடாத்திய எந்த அரசாங்கமும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவில்லை: அதற்குப்பதிலாக தமிழ் மக்கள் மீது பயங்கரவாதத்தை அவிழ்த்து விட்டும் இனக்கலவரத்தைத் தூண்டி விட்டும் தமிழ் மக்களை அடக்கி வருகிறது. அப்படி இருந்தும் அன்று முதல் இன்று வரை தமிழ் மக்கள் பிரச்சினை அரசாங்கத்திற்குச் சாதமாகவே நடந்து கொண்டிருக்கிறார்கள்.

"தமிழ் மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கூறி வந்த இடதுசாரிகள் தமிழ் மக்களின் இந்தச் செயலால் வெறுப்புற்று சம அந்தஸ்து என்ற சொல்லையே கைவிட்டு விட்டனர். கடந்த அரசாங்கங்களின் செயலால் இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமை பிரஜா உரிமை ஆகியன பறிக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் மொழி உரிமையும் பறிக்கப்பட்டது.

அரச வானொலி மக்களுக்குச் செய்து வரும் பொய்ப் பிரசாரத்துக்கு இதுவரை யாரும் சரியான பதிலடி கொடுக்கவில்லை. அதனால்தான் பாராளுமன்றத்திற்கு வெளியில் இயங்கும் எமது இயக்கம் அரசாங்கத்தின் பொய்ப் பிரசாரத்திற்கு தகுந்த பதிலடி கொடுத்து வருகிறது"

## ரயில்வே லொறி தடம் புரண்டது!

(கொழும்பு)
ரயில் பாதையைக் கண்காணிப்பதற்காக அனுப்பப்படும் ரயில்வே "லொறி" ஒன்று பட்டிப்பளையில் தண்டவாளத்திற்குக் குறுக்கே கட்டை போல்று போடப்பட்டிருந்தமையால் தடம் புரண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்கானிஸ்தானில்

# தீவிரவாதிகளை ஒழித்துக்கட்ட கிராமப்பகுதிகளில் தாக்குதல்?

## சோவியத் படைகள் நடத்துவதாகத் தகவல்

காபூல், ஜூலை 15

சோவியத் விமானப்படையினர் காபூல் நகருக்கு அருகிலும், ஆப்கானிஸ்தானின் தென்கிழக்கு மாகாணத்திலுமுள்ள பெருந்தொகையான கிராமங்கள்மீது கடந்த பத்து நாட்களாக பலத்த விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியிலுள்ள இராஜதந்திர செய்தி வட்டாரங்களின்படி, சுமார் 60 கிராமங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன என்றும், ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனரென்றும் தெரியவருகிறது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் நிலைகொண்டிருப்பதை ஆட்சேபித்து அமெரிக்கா உட்பட பல மேற்கு ஐரோப்பிய நாடுகள் மாஸ்கோ ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரித்து வருவது தெரிந்ததே.

இந்தியா சென்றுள்ள பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சர் திரு ஆகாஷாஹி ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள இந் நெருக்கடி நிலைமை பற்றி இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு நரசிம்மராவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (வெ)

## பிரதம மந்திரிப் பதவியை சீனத்தலைவர் கைவிடுவார்?

பீக்கிங், ஜூலை 15

சீனத் தலைவர் ஹுவா குவாபெங் பிரதம மந்திரி பதவியிலிருந்து விரைவில் விலகக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மைக்காலமாக இதற்கான அறிகுறிகள் பீக்கிங்கில் தென்படுகின்றன என்று அங்குள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

உத்தியோகபூர்வ பத்திரிகைகளிலும், அறிக்கைகளிலும், திரு. குவா குவா பெங்கின் கட்சித் தலைமை, பதவி, இராணுவத் தலைமை பதவி பற்றியே குறிப்பிடப்படுகிறது.

இது பிரதம மந்திரி பதவியில் இருந்து அவர் இராஜினாமாச் செய்வதற்கு முன்னோடியாக மக்களின் அபிப்பிராயத்தைத் தயார்செய்யும் ஒரு நடவடிக்கையாகுமென்று கருதப்படுகிறது. [வெ]

வார்ஸோவுக்கு இணையாக

## பிரிட்டன்தன் படைகளை அதிகரிக்க முடிவு

லண்டன், ஜூலை 15

பிரிட்டிஷ் அரசாங்கம் தன் படைபலத்தை ஐரோப்பாவில் அதிகரிப்பதற்காகப் புதிய யுத்த டாங்கிகளையும், ஏனைய இராணுவ சாதனங்களையும் வாங்குவதற்கு 130 கோடி டவுண் ஸ்டேர்லிங்கைச் செலவிடப் போவதாகத் தெரிவித்துள்ளது.

வார்சோ உடன்படிக்கை நாடுகளின் படைவலிமைக்கு ஈடுசெய்வதற்கே இது அவசியமானதென்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் திரு பிம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நவீன யுத்த டாங்கிகளை கொள்வனவு செய்வதற்கு 30 கோடி டவுண் ஸ்டேர்லிங் கடைசியாகச் செலவிடப்படவிருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டனின் பாதுகாப்பு திட்டமிடல் முறையில் ஏற்பட்டிருக்கும் இந்தக் கொள்கை மாற்றம் பிரிட்டனுக்கும் ஏனைய நேட்டோ நாடுகளுக்குமிடையே யுத்த டாங்கிகளின் உற்பத்தியில் நெருங்கிய ஒத்துழைப்புக்கு வழிகோலக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. [வெ]

## கமலத்தின்...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

சட்: நீர் கமலத்தின் பின்னால் நின்று கரைச்சல் கொடுத்தீர்? இல்லை

சட்: லோகநாதனைத் தெரியுமா?-ஆம்

சட்: எப்படித் தெரியும்?-பஸ் நிலையத்தில் கோணேஸ்வரலிங்கம் காட்டினார்?

சட்: நீரும் கோணேஸ்வரலிங்கமும் கமலத்திற்குக் கரைச்சல் கொடுத்தீர்களா?-இல்லை.

சட்: கமலத்திற்குக் கரைச்சல் கொடுத்தால் உம்மை எவரும் கண்டிக்கவில்லை?-இல்லை.

சட்: கமலம் வரும்போது நீரும், 1ம் எதிரியும் ஒழுங்கையில் நின்றீர்களா?-ஆம்

சட்: 2ம் எதிரியைத் தெரியுமா?-தெரியாது கண்டிருக்கிறேன் பழக்கமில்லை.

நகரத் தொழிலாளி க. கோபாலசாமி சாட்சியமளிக்கையில் ராமச்சந்திரன் ராஜலட்சுமியை தெரியுமென்றும், அவளைக் கூட்டுப் புனர்வு செய்து கொடுத்திருப்பதாகவும் கூறினார்.

விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. [ஈ]

## வைத்திய...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைக்கு வராத மருந்தகத் தாதிமார் அனைவரும் சேவையிலிருந்து விலகிவிட்டதாகக் கருதப்பட்டு வேலைக்கு வராது நின்றிருக்கின்றார்களென்றும், தொழிற்சங்க நடவடிக்கை எதைப் பற்றியும் முன்னறிவித்தல் கொடுக்கப்படவில்லையென்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் திரு. பி. ஸி. பெரேரா தெரிவித்தார்.

பெருந்தொகையான மருந்தகத் தாதிமார் வேலைக்குச் செல்லாதிருப்பதால் நோயாளிகளின் நன்மைகருதி அவசர நடவடிக்கையாகத் தற்சமயம் பயிற்சிபெற்றுவரும் தாதிகளை சுகாதார அமைச்சு சேவைக்கு அழைத்துள்ளது.

### மட்டக்களப்பில் ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் பணி புரியும் 69 தாதிகளும் நேற்று வேலைக்கு வராததால் நோயாளிகள் பெரும் அவதியுற்றனர். [கு]

### ரயில்வே வேலைநிறுத்தம்

இதேவேளையில் வேலைநிறுத்தம் செய்துவரும் ரயில்வே ஊழியர்கள் நேற்றும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஆனால் ரயில் சேவைகள் பலவும் வழமைபோல நடைபெற்றன.

வேலைநிறுத்தக்காரர்களின் பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் அடிபணியப்போவதில்லையென்று காணிக் தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு சிறில் மத்தியூ தெரிவித்துள்ளார். (கு)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்ட சீட்டிழுப்பு போட்டி




## பரிசுகளும் நன்கொடைகளுமாக ரூபாய் 142,000 எடுத்துச் செல்லுங்கள்

ஜூன் 1ஆம் திகதிமுதல் ஆகஸ்ட் 31 வரை

**முதற் பரிசு**
நஷனல் 18" வர்ண T.V.

**இரண்டாம் பரிசு**
நஷனல் 88 NRP குளிர்சாதனபெட்டி

**மூன்றும் பரிசு**
நஷனல் 12" கறுப்பு/வெள்ளை T.V.

**250 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொன்றும் ரூபாய் 500/= பெறுமதி கொண்ட உதிரிப்பாகப் பணவுறுதிச்சீட்டு

பின் வரும் மொடல்களுள் ஒன்றைத் தெரிவு செய் யுங்கள், ஒவ்வொருவரின் நிதி நிலைக்கும், ஒவ்வொரு வரின் தேவைக்கும் ஏற்ற ஒரு ரகம் உண்டு.

| மொடல் | விலை |
|---|---|
| A5ON | ரூ. 9,350/- |
| GT50E | 9,750/- |
| GT50EN | 10,350/- |
| FR80N | 9,900/- |
| A80N | 10,000/- |
| A100N | 11,000/- |
| GP100U | 11,750/- |
| K125N | 12,750/- |
| GP 125 N | 13,750/- |
| TS125N | 14,850/- |
| GT125EN | 16,250/- |
| GT125N | 15,250/- |
| TS185N | 16,250/- |
| GT185N | 17,850/- |
| GT185EN | 19,500/- |
| GT200EN | 21,500/ |

நாம் வழங்கும் 253 கவர்ச்சிகரமான பரிசுகளுள் ஒன்றைப் பெறுவதற்கு விருப்புகிறீர்களா? அப்படியானல், கீழே குறிப்பிடப்பட்டுள்ள எமது அங்கிகாரம் பெற்ற விற்பனையாளரிடம் சுசுக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றை 1980 ஜூன் முதலாம் தேதிக்கும், ஆகஸ்ட் 31ம் திகதிக்கும் இடையில் வாங்குங்கள் இது இந்த ஆண்டில் சிறந்த அதிர்ஸ்ட சீட்டிழிப்பு

**போட்டியில் பங்கு பற்றுவது எப்படி**

இங்கு குறிப்பிடப்பட்ட அங்கிகாரம் பெற்ற வியாபாரி ஒருவரிடம் நிங்கள் விரும்பிய சுசுக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கும் போது சுசுக்கி பொன்னட்டையை நீங்கள் பெறுவீர்கள், உங்கள் பெயர், முகவரியை அவ்வட்டையில் எழுதி முகவரி இடப்பட்ட விசேட உறையில் உங்கள் பற்றுச் சீட்டுடன் இணைத்து பதிவு தபாலில் அனுப்புங்கள். அல்லது நேரடியாகவே எமது விற்பனை முகாமையாளரிடம் கையளியுங்கள். தபாலில் காணமல் போனலோ, அல்லது பிந்தினலோ, கோரிக்கை எதுவும் பரிசிலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பரிசு பெறுபவர் விபரம், இந்த விளம்பரம் தாங்கி வரும் பத்திரிகைகளில் 1980 செப்டம்பர் 20ம் திகதி பிரசுரமாகும்

கொழும்பு
கொலட்ஸ் லிமிட்டெட்
த பினேன்ஸ் கொம்பனி லிமிட்டெட்

மாத்தளை
சூரியா ஜெம்ஸ்

நுவரஎலிய
இன்டர்ன் ஓடே இன்ஜினியரிங்

இரத்தினபுரி
எஸ். பி. பியதாச அன்ட் கோம்பனி
த பினேன்ஸ் கொம்பனி லிமிட்டெட்

மன்னார்
சாபியா ஸ்டோர்ஸ்

பதுளை
சென்றல் மோட்டோர்ஸ் லிமிட்டெட்
த பினேன்ஸ் கொம்பனி லிமிட்டெட்

யாழ்ப்பாணம்
எஸ். சின்னதுரை அன்ட் கொம்பனி
ஒடோஸ் லிமிட்டெட்
த பினேன்ஸ் கொம்பனி லிமிட்டெட்

கிளிநொச்சி
கலா டேடர்ஸ்.

திரிகோணமலை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

மட்டகளப்பு
சிறுன்

## லம்கோ லிமிடெட்

தலைமையகம்,
815, டீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு-10, தொலைபேசி : [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

